கோவிட்-19 க்கு எதிரான உங்கள் பாதுகாப்பை அதிகரியுங்கள்

கோவிட்-19 இன் மிகக் கடுமையான விளைவுகளிலிருந்து பாதுகாக்கப்பட்டிருப்பதற்கு தடுப்பூசிதான் (வக்சீன்) மிகச்சிறந்த வழியாகும். நோய்த்தொற்று அறிகுறிகளை தடுப்பூசி எப்போதும் தடுக்காது. ஆனால் ஒரு நபர் நோய்த்தொற்றுக்கு ஆளானால் அதன் தீவிரத்தை குறைக்க உதவும். கோவிட்-19 க்கு பின்வரக்கூடிய விளைவுகளில் இருந்து (பொதுவாக நீண்ட கோவிட் என அழைக்கப்படுகிறது) வரும் அபாயத்தைக் குறைக்கும்.

கோவிட்-19 பூஸ்டர் ஊசியை ஏன் போட வேண்டும்?

கோவிட்-19 பூஸ்டர் ஊசி பின்வருவனவற்றை பெற உதவும்:

- கடைசி ஊசி போட்டதிலிருந்து, குறைந்து போயிருக்கும் பாதுகாப்பை அதிகரிக்கும்
- கோவிட்-19 ஆல் மோசமான சுகவீனம் வருவதை தடுக்கும்

மேலதிக தகவலுக்கு, ontario.ca/covidvaccines க்குச் செல்லுங்கள்.

Ontario

பூஸ்டர் ஊசியை நான் எப்போது எடுக்கவேண்டும்?

கடுமையான கோவிட்-19 நோயை பெற்றுக்கொள்ளக்கூடிய அதிகமான அபாயமுள்ளவர்கள் கடைசியாக ஊசி பெற்றுக்கொண்டதிலிருந்து அல்லது உறுதிசெய்யப்பட்ட கோவிட்-19 தொற்றிலிருந்து குறைந்தது ஆறு மாதங்கள் கடந்த பின்பு பூஸ்டர் ஊசியை பெற்றுக்கொள்ளும்படி பரிந்துரைக்கப்படுகிறார்கள். இது பின்வரும் நபர்களை உட்படுத்தும்:

- 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்
- நீண்ட கால பராமரிப்பு இல்லங்கள், ஓய்வுபெற்றோர் இல்லங்கள், முதியோரைப் பராமரிக்கும் லாஜுகள் மற்றும் கூட்டமாக வாழும் வேறு இடங்களில் உள்ள முதியவர்கள்
- 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய நபர்கள், சிக்கலான மருத்துவப் பராமரிப்புத் தேவைகள் உள்ளவர்களுக்காக ஒரு கூட்டமாக பராமரிக்கப்படும் அமைப்பில் வசிப்பவர்கள்
- 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட ஓரளவு முதல் கடுமையான அளவு நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள்
- கர்ப்பிணி பெண்கள்
- சுதேசிகள் என்று கருதப்படும் 55 வயதும் அதற்கும் அதிகமானவர்களும், இனுவிட் அல்லது மீடிஸ் மற்றும் அவர்களுடைய வீடுகளில் இருக்கும் சுதேசிகள் அல்லாத 55 வயதும் அதற்கு மேற்பட்டவர்களும்

செப்டம்பர் 1, 2022 இலிருந்து இன்னும் பூஸ்டர் ஊசியை பெற்றுக்கொள்ளாத 5 வயதும் அதற்கு மேற்பட்டவர்களும் கடைசியாக ஊசி பெற்றுக்கொண்டதிலிருந்து அல்லது உறுதிசெய்யப்பட்ட கோவிட்-19 தொற்றிலிருந்து ஆறு மாதங்கள் ஆகிவிட்டிருந்தால் பூஸ்டர் ஊசியை பெற்றுக்கொள்ளும்படி பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

செப்டம்பர் 1, 2022 இலிருந்து பூஸ்டர் ஊசியை ஏற்கெனவே பெற்றுக்கொண்ட அதிக ஆபத்தில் இல்லாத மற்றவர்களுக்கு 2023 இலையுதிர் காலத்தை நெருங்கும் போது பரிந்துரைகள் கிடைக்கும்.

ஆறு மாதமும் அதற்கு மேற்பட்டவர்களும், வழக்கமான வேறு தடுப்பு மருந்துகளைப் பெற்றுக்கொள்ளும் அதே நேரத்தில் அல்லது அதற்கு முன்னர் அல்லது பின்னர் கோவிட்-19 தடுப்பூசியை பெற்றுக்கொள்ளலாம்.

கோவிட்-19 வந்திருந்தால் பூஸ்டர் ஊசி எனக்கு தேவையா?

உங்களுக்கு கோவிட்-19 ஏற்கெனவே வந்திருந்தாலும், நோய் திரும்ப வராமலிருக்க அல்லது மோசமான விளைவுகள் ஏற்படாமல் இருக்க நீங்கள் பூஸ்டர் ஊசியைப் போடவேண்டும். நீங்கள் கடைசியாக ஊசி பெற்றுக்கொண்டதிலிருந்து அல்லது உறுதிசெய்யப்பட்ட கோவிட்-19 தொற்றிலிருந்து குறைந்தது ஆறு மாதங்கள் வரை காத்திருக்கும்படி பரிந்துரைக்கப்படுகிறீர்கள்.

கோவிட்-19 நோயால் மோசமாக சுகவீனம் அடைவதிலிருந்து நல்ல பாதுகாப்பைப் பெற்றிருப்பதற்காக உங்களுக்கு முதலாவதாக வழங்கப்படும் ஊசியே சிறந்த பூஸ்டர் ஊசியாகும்.

ஹெல்த் கனடாவினால் அங்கீகரிக்கப்பட்ட, ஒருவருடைய வயதிற்குப் பொருத்தமான பூஸ்டர் ஊசி, தகுதி பெறுவீர்கள் என்றால் உங்களுக்கு வழங்கப்படும்.

Tamil. Boost Your Protection Against COVID-19. Publication No. (301100) ISBN No. 978-1-4868-6614-4. PDF. Revised May 2023. © King's Printer for Ontario, 2023.

மேலதிக தகவலுக்கு, ontario.ca/covidvaccines க்குச் செல்லுங்கள்.

Ontario